-27-

சுருக்கம்

பேரிடர் மேலாண்மை – கொரோனா தொற்று பரவல் – பொது விநியோக நியாயவிலை கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு முகக்கவசம் வழங்குதல் – கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் நியாயவிலை கடைப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை கோரியது – ஆணை வெளியிடப்படுகிறது

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.2)த்துறை**

அரசாணை (நிலை) எண்.494 நாள்: 14.09.2020

சார்வரி–ஆவணி 31,
திருவள்ளுவர் ஆண்டு, 2051
படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.25, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஏ.2) துறை, நாள் 04.03.2020
2. அரசாணை எண்.358, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.2) துறை, நாள் 16.07.2020
3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18617.2020–பொவிதிபொது.2, நாள் 03.08.2020
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதம் எண்.இ.பே.1/2212/2020, நாள் 17.08.2020 மற்றும் 03.09.2020.

@@@@

**ஆணை:**

பார்வை 1–இல் காணும் அரசாணையில் பொது விநியோகத்திட்ட நியாயவிலைக் கடைகள் மூலம் அரசின் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தும்போது, நியாயவிலைக் கடை விற்பனையாளர் மற்றும் கட்டுநர்களுக்கு ஏற்படும் கூடுதல் பணிச்சுமையை ஈடுசெய்ய ஒரு குடும்ப அட்டைக்கு 0.50 பைசா வீதம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. பார்வை 2–ல் காணும் அரசாணையில் கோவிட்–19 பாதிப்பில் இருந்து பொது மக்களை பாதுகாக்கும் பொருட்டு நியாய விலை கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு குடும்ப உறுப்பினருக்கு தலா இரண்டு முகக்கவசங்கள் வீதம் வழங்கப்படும். முதற்கட்டமாக மாநகராட்சிகள் (சென்னை மாநகராட்சி தவிர) நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு (69,09,385 குடும்ப அட்டைதாரர்களுக்கு) ஒருவருக்கு தலா 2 முகக்கவசங்கள் வீதம் அனைத்து குடும்ப உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

2. பார்வை 4–ல் காணும் முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில் அரசாணை எண்.358, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.2) துறை, நாள் 16.07.2020ன்படி, தற்போது ஒப்பந்தப்புள்ளி மூலமாக தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மூலம் முகக்கவசங்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் விநியோகப்பட்டு நியாய விலைக்கடைகள்

மூலமாக வழங்க அறிவுறுத்தியதின்படி தற்போது குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக்கடைகள் மூலம் அவர்கள் மாதாந்திர உணவுப் பொருட்கள் வாங்க வரும்போது விநியோகம் செய்யப்பட்டு வருகிறது எனவும், இந்நிலையில், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் தனது கடிதத்தில், முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சி தவிர இதர நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக்கடைகளில் உள்ள விற்பனை முனையக் கருவிகளில் (POS) உரிய மாற்றங்கள் செய்யப்பட்டு அத்தியாவசியப் பொருட்களோடு அனைத்து குடும்ப உறுப்பினர்களுக்கு தலா 2 முகக்கவசங்கள் வீதம் வழங்கப்பட்டு வருகிறது எனவும், பொதுவிநியோக திட்ட நியாய விலைக்கடைகள் மூலம் அரசின் சிறப்புத்திட்டங்கள் செயல்படுத்தும் போது, நியாய விலை கடை விற்பனையாளர் மற்றும் கட்டுநர்களுக்கு ஏற்படும் கூடுதல் பணிச்சுமையை ஈடுச்செய்ய ஒரு குடும்ப அட்டைக்கு 0.50 பைசா வீதம் வழங்கலாம் என அரசாணை (நிலை) எண்.25, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை நாள்.04.03.2020–ல் தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், கோவிட்–19 நோய் தொற்றுள்ள காலகட்டத்திலும் தன்னுடைய உயிருக்கு ஊறு நேரும் எனத்தெரிந்தும் எவ்வித இடர்பாடுகள் இருந்தாலும் நியாய விலை கடைகள் மூலம் செயல்படுத்தப்படும் அரசின் சிறப்பு திட்டங்களை அடித்தட்டு மக்களுக்கு சென்று அடையும் வண்ணம் சிறப்புடன் செயல்படும் நியாய விலைகடை பணியாளர்களை ஊக்குவிக்குமாறு சிறப்பு ஊக்கத்தொகையாக குடும்ப அட்டை ஒன்றுக்கு ரூ.0.50 வீதம் 6909385 குடும்ப அட்டைகளுக்கு மொத்தம் ரூ.34,54,692.50/– (ரூபாய் முப்பத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து ஆறுநூற்று தொன்னூற்று இரண்டு ஐம்பது பைசா மட்டும்) சிறப்பு ஊக்கத் தொகையினை தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய நிதியில் இருந்து வழங்க பரிந்துரை செய்து உரிய அரசாணை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேற்காணும் சூழ்நிலையில், முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் பரிந்துரையினை ஏற்று, முகக்கவசம் கொள்முதல் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய நிதியில் இருந்து வழங்க அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி நியாய விலை கடை பணியாளர்களை ஊக்குவிக்கும் விதமாக சிறப்பு ஊக்கத்தொகையாக குடும்ப அட்டை ஒன்றுக்கு ரூ.0.50 வீதம் 69,09,385 குடும்ப அட்டைகளுக்காக மொத்தம் ரூ.34,54,692.50/– (ரூபாய் முப்பத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து ஆறுநூற்று தொண்ணூற்று இரண்டு ஐம்பது பைசா மட்டும்) தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய நிதியிலிருந்து ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

5. இவ்வாணை நிதி(வருவாய்)துறையின் அ.சா.எண்.31004/2020, நாள்:14.9.2020–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**அதுல்ய மிஸ்ரா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்**

முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–600009.
இயக்குநர் (பேரிடர் மேலாண்மை) (பொறுப்பு), தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை, சேப்பாக்கம், சென்னை–600005.
முதன்மை கணக்காயர், சென்னை–600018/600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 008.

<u>நகல்</u>

கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600009.

கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600009.

முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600009.

முதன்மைச் செயலாளர், பொதுப்பணித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600009.

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600009.

தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–600009.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–600009.

நிதி (வருவாய் / வ.செ–1 / வ.செ.–2) துறை, தலைமைச் செயலகம், சென்னை–600009.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (அநமு) துறை, தலைமைச் செயலகம், சென்னை–600009.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

16/9/2020

பிரிவு அலுவலர்.